DINAMANI 22 FEB 09

ஞாயிற்றுக்கிழமை, 22 பிப்ரவரி, 2009

# ஈஷா யோகா மையம் சார்பில் திருச்சியில் நாளை மகா சிவராத்திரி

**திருச்சி, பிப். 21:** ஈஷா யோகா மையம் சார்பில், திருச்சி சிந்தாமணியிலுள்ள தேசியக் கல்லூரி மேல்நிலைப் பள்ளி விளையாட்டுத் திடலில் மகா சிவராத்திரி விழா திங்கள்கிழமை நடைபெறுகிறது.

4-வது ஆண்டாக திருச்சியில் நடைபெறும் இந்த விழா, மாலை 6 மணிக்குத் தொடங்கி, மறுநாள் காலை 6 மணி வரை விடிய விடிய நடைபெறுகிறது.

குண்டேச்சா சகோதரர்கள், இந்தியன் ஓஷன் மற்றும் நாத் ப்ரம்மா குழுவினரின் இசை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. விழாவில் பங்கேற்கும் அனைவருக்கும் நள்ளிரவு வரை அன்னதானம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மற்றும் வெளிநாடுகளிலும் இதேபோல 70-க்கும் மேற்பட்ட மையங்களில் சிவராத்திரி விழாக்கள் நடைபெறுகின்றன. சத்குரு ஜக்கி வாசுதேவ்-ன் சிறப்பு அருளாசி, அவரே வழிநடத்தும் சிறப்பு தியானங்கள் பிரம்மாண்ட திரைகளில் ஒளிபரப்பப்படுகின்றன.

இத்தகவலை ஈஷா யோகா மையத்தின் பொறுப்பாளர்கள் பி. மாணிக்கம், மக்கள் தொடர்பு அலுவலர் எல். லட்சுமணன் ஆகியோர் சனிக்கிழமை தெரிவித்தனர்.

திருச்சி மாவட்டத்தில் இதேபோல, துறையூரிலும், திருவெறும்பூரிலும் மகா சிவராத்திரி விழாக்கள் ஈஷா யோகா மையத்தின் சார்பில் நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.